DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF COURT, THIRUVADANAI

O.S. No. 56/2018

DEPOSITION OF WITNESS P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name : | கனிமொழி | Father's Name : | |
| Village : | | Taluk : | |
| Caste : | | Calling : | |
| Religion : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.07.2026

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1. சர்வே எண்.26/9 மற்றும் 26/35-க்கான சிட்டாவின் அசல் மற்றும் சான்றிட்ட நகல் எடுத்து வந்துள்ளேன். **சர்வே எண்.26/9 க்கான சிட்டாவின் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.26/35 க்கான சிட்டாவின் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சர்வே எண்.26/9 மற்றும் சர்வே எண்.26/35-க்கான நத்தம் அடங்கல் பதிவேட்டின் அசல் மற்றும் சான்றிட்ட நகல் எடுத்து வந்துள்ளேன். **சர்வே எண்.26/9க்கான நத்தம் அடங்கல் பதிவேட்டிற்கான சான்றிட்ட நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.26/35க்கான நத்தம் அடங்கல் பதிவேட்டிற்கான சான்றிட்ட நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிராம எண்.172 தும்படக்காகோட்டையின் புல வரைபடத்தின் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

[signature] 28/07/26

**சர்வே எண்.26/9க்கான UDR காலத்தின் அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

**1.** நில உடமை மேம்பாட்டு திட்ட காலம், பட்டா பாஸ் புத்தக காலம், செட்டில்மெண்ட் காலம் என்ன என்பது தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். மேற்படி மூன்று காலங்களிலும் நஞ்சை புஞ்சை நிலங்கள் தொடர்பாக தான் அரசாங்கத்தால் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். நத்தம் இடங்களுக்கு முதன் முதலில் 1992 ல் சர்வே செய்யப்பட்டது என்றால் சரிதான். 1992 ற்கு பிறகு தான் நத்தம் நிலங்களுக்கு அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1992க்கு முன்பு நத்தம் இடங்கள் எல்லாம் அரசுக்கு பாத்தியப்பட்ட குடியிருபபு நிலங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

**2.** நத்தம் சர்வே எண். 26/9ல் இருந்து தான் சர்வே எண்.26/35 பிரிந்ததாக தெரிவித்துள்ளீர்கள் எப்போது பிரிந்தது என்றால் UDR காலத்திலேயே பிரிந்தது. நீங்கள் கொண்டு வந்துள்ள சர்வே ரிஜஸ்டரில் சர்வே எண்.26/9 மற்றும் சர்வே எண்.26/35 இரண்டுமே உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.26/9லிருந்து சர்வே எண்.26/35 பிரிந்ததாக சொல்வது தவறு என்றாலும், இரண்டுமே ஏக காலத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் விசாரணை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

REVATHI SUBBIAH

Digitally signed by REVATHI SUBBIAH
Date: 2026.07.28 18:13:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாடானை.